**அ.வ.எண். 384/2022**
**வா.சா.2 : ஜெகஜோதி**
**தேதி : 02.03.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

வாதி சத்தியபாமா கோயம்புத்தூரில் குடியிருக்கிறார். வாதியை ரங்கப்பாளையத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள். வாதியின் தாத்தா பெயர் எனக்கு தெரியாது. வழக்குச்சொத்துக்கள் கூடலூர் கிராமத்தில் அமைந்துள்ளது. தாவா சொத்துக்கள் எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்று தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது மொத்தம் 13 ஏக்கர் உள்ளது. தாவா சொத்துக்கள் புஞ்சை நிலம். வாதியின் அப்பா வழக்குச்சொத்தை யாரிடமிருந்து கிரயைம் வாங்கினார் என்று தெரியாது. வாதியின் தந்தை சுமார் 20, 25 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். வாதிக்கு எங்கு திருமணம் நடைபெற்றது என்று தெரியாது. எனது ஊர் கோதூர். வாதிக்கு கோதூரில் சொத்துக்கள் இல்லை. மேலும் கரூரிலும் சொத்துக்கள் இல்லை. வாதியின் தகப்பனாருக்கு வழக்குச்சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்கள் உண்டா என்றால் தெரியாது. நான் கோதூரில் விவசாய வேலை செய்து வருகிறேன். வாதியின் தகப்பனார் அவரது மகனுக்கு உயில் எழுதி வைத்த விவரம் உங்களுக்கு எப்போது தெரிய வந்தது என்றால் உயில் எழுதி வைக்கவில்லை. வாதி 30 ஆண்டுகளுக்கு மேலாக கோயமுத்தூரில் குடியிருந்து வருகிறார். வாதி, பிரதிவாதி குடும்பத்தை

பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு உங்களை யாரென்று தெரியாது என்றால் எனக்கு தெரியும் அவர்களுக்கு என்னை தெரியாது. நீங்கள் வாதி அடிக்கடி சென்று பிரதிவாதியிடம் பங்கு கேட்டதாக வாதி சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.02 18:48:06 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.